பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 25 புதன்கிழமை 10.01.2024 கதிர் 425

# வடக்கு – கிழக்கு மாகாணங்களில் முதலீட்டு வலயங்களுக்கு அனுமதி

வடக்கு, கிழக்கு, வடமேல் மற்றும் தென்மாகாணத்தில் புதியமுதலீட்டுவயத்தைஅமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

அதனடிப்படையில், ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகஅரசமற்றும் தனியார் துறைகளுக்கிடையே ஒருங்கிணைந்த பொறிமுறையொன்றைஉருவாக்கவேண்டிய தேவை 2022ஆம் ஆண்டு வரவு, செலவுத்திட்ட உரையில் வலியுறுத்திக்கூறப்பட்டுள்ளது.

அதற்கமைய, கீழ்காணும் வகையில் புதிய முதலீட்டு வலயத்தைஅமைக்கவேண்டிய தேவைகண்டறியப்பட்டுள்ளது. அதற்கேற்ப வடக்கு, ☞ 2

## இனி அது ரகசியம் அல்ல!

தமிழ்அரசுக்கட்சியின்அரசியல் குழு இன்று பெருந் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் இன்று நடைபெறுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில்கட்சியின்கிளைக்குழுக் கூட்டத்தில்தனக்குஆதரவானவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள் என்று சம்பந்தன்வழங்கியமுறைப்பாட்டின் மீதான விசாரணையை அவர் வலியுறுத்தி வருகின்றார் என்று சொல்லப்படும் நிலையில், கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தை ஒத்திவைப்பதற்கானஒருகாரணமாக இது இன்று பயன்படுத்தப்படுமா என்றகேள்விபலமாகஎழுந்துள்ளது.

கட்சியின்பொதுக்குழுக்கூட்டம் ஜனவரி 21 திருகோணமலையில் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ☞ 2

## சிறு பண்ணையாளர்களை வலுப்படுத்த நடவடிக்கை

நாட்டிற்குத் தேவையான பால் உற்பத்திக்காக சிறிய மற்றும் நடுத்தர பண்ணையாளர்களைப் வலுப்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களம் தற்போது நடவடிக்கை எடுத்துவருவதாக கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.பி. ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில்நேற்று அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டிற்குத் தேவையான ☞ 2

## ரூ. 35 ஆயிரம் கொடுப்பனவு வேண்டும் மருத்துவ ஊழியர்கள் நேற்று போராட்டம்

### வைத்தியசாலைகளில் சேவைகள் பாதிப்பு

நிறைவுகாண் மருத்துவ ஊழியர்கள் 35,000 ரூபா கொடுப்பனவு வழங்குமாறு கோரிநேற்றுக்காலை 8 மணிமுதல்தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவர்களின்போராட்ட அறிவிப்பைஅடுத்து,அரச வைத்தியசாலைகளின் இரசாயன ஆய்வுக்கூட ஊழியர்கள், மருந்தாளர்கள், கதிரியக்க தொழில் வல்லுநர்கள் இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் இணைந்தனர்.

இந்தத்தொழிற்சங்க நடவடிக்கையினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கதிரியக்க சேவைகள், மருந்து விநியோகம், ஆய்வுக்கூடசேவைகள் உள்ளிட்ட சேவைகள் முன்னெடுக்கப்படவில்லை.

இந்த தொழிற்சங்க நடவடிக்கையினால் வைத்தியாலைக்கு சேவைகளைப் பெறுவதற்காகசென்றஅனைத்து நோயாளிகளும் சிரமங்களை எதிர்நோக்கினர். அத்துடன்அவர்கள் தமது கடுமையான விசனத்தினையும்வெளியிட்டனர்.

இந்நிலையில், நிறைவுகாண்மருத்துவ ஊழியர்களின் கூட்டு ஒன்றியத்தின்தலைவர் ரவி குமுதேஷ்,

மருத்துவ அதிகாரிகளுக்கானநியாத்தினை வழங்குவதற்கு அரசாங்கம் அமைச ☞ 2

## மாகாண நிதிக் கையாளுகைக் குழு உருவாக்க அமைச்சரவை அனுமதி

மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளை பயனுள்ள வகையில் மாற்றுவதற்காக நிதி ஆணைக் குழுவை உருவாக்க அமைச்சரவைஅனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில், நாட்டில் சமநிலை பிராந்திய அபிவிருத்தியை எய்தும் நோக்கில் மாகாணசபைகளுக்குத் தேவையான வளங்களை மதிப்பீடு செய்தலும், தேசிய வரவு, செலவுத்திட்டத்தில் மாகாணசபைகளுக்கான நிதியொதுக்கீடுகளை மிகவும் பயனுள்ள வகையில் மாகாண சபைகளுக்கு வழங்கும் நோக்கிலும் விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக அரசியலமைப்பின் 154ணஉப உறுப்புரையின்கீழ்நிதி ஆணைக்குழுதாபிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆணைக்குழு ☞ 2

## ஜனாதிபதித் தேர்தலுடன் சேர்த்து மாகாணத் தேர்தலையும் நடத்துக

### கருணாகரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் கோரிக்கை

ஜனாதிபதிதேர்தலை நடத்துகின்றபோது, மாகாணசபைகளுக்கான தேர்தலையும்இணைத்து நடத்துமாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின்அங்கத்தவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தம் கருணாகரன் நாடாளுமன்றத்தில்கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகச் சட்டமூலம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது ☞ 10

## 'இலங்கையர்' என்ற எண்ணக்கருவை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் முயற்சி

### ஜனாதிபதி தெரிவிப்பு

சுதந்திரமான தேசத்தைக்கட்டியெழுப்ப, சேர்.பொன் அருணாச்சலத்தின் 'இலங்கையர்' எண்ணக்கருவை 'இலங்கையர்களின் தேவைகள்' என்ற வகையில் மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அந்த வேலைத்திட்டத்தைப் பலப்படுத்தும் வகையில் போர் சார்ந்த பிரச்சினைகள் அனைத்துக்கும் 2025இற்கள் தீர்வு காண ☞ 2

## அரச ஊழியர் சம்பள உயர்வில் பாதி ஜனவரியிலேயே கிட்டும்

### வழங்க அமைச்சரவை அனுமதி

ஏப்ரல் மாதம் முதல் அரச ஊழியர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட 10,000 ரூபாவாழ்க்கைச்செலவு கொடுப்பனவின் ஒரு பகுதியை ஜனவரி முதல் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதனிடையே ☞ 8

## நல்லிணக்க அலுவலக சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்

தேசிய ஒற்றுமைக்கும்நல்லிணக்கத்துக்குமான அலுவலக சட்டமூலம் நாடாளுமன்றத்தில்விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் நேற்று மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை இடம்பெற்றது. விவாதத்தை அடுத்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார்பொன்னம்பலம் சட்டமூலத்துக்கு வாக்கெடுப்புக் கோரினார். அதற்கமையஇடம்பெற்ற வாக்கெடுப்பில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 48 வாக்குகளும், எதிராக 7 வாக்குகளும் வழங்கப்பட்டன. ☞ 8

## தொழில்நுட்பப் பல்கலையை நிறுவ அமைச்சரவை வழங்கியது அனுமதி

இலங்கையில், விஞ்ஞான தொழிநுட்பவியல் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்காக கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி; பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுநடைபெற்ற ☞ 2

## போராளி பண்டிதருக்கு வல்வையில் அஞ்சலி



யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறைப் பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான கப்டன் பண்டிதரின் 39ஆம் ஆண்டு நினைவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்தநினைவேந்தல் நேற்றுஅவரதுஇல்லத்தில் இடம்பெற்றது. ☞ 8

## அனைத்துப் பிரதேசங்களிலும் ஒரு அஸ்வெசும விசேட பிரிவு

அனைத்து பிரதேச செயலக பிரிவுகளுக்கும் ஒரு அஸ்வெசும விசேட பிரிவு அமைக்கப்படவுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அஸ்வெசுமநலன்புரி நன்மைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

2023 ஆம் ☞ 2

## புலம்பெயர் அமைப்புகள் அரசுடன் நல்லிணக்கம் தொடர்பில் பேச்சு

### இப்படிச் சொல்கிறார் நீதி அமைச்சர்

தேசியநல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பில் புலம்பெயர் அமைப்புக்கள் தம்முடன் பேச்சு நடத்துகின்றன என்று நீதி அமைச்சர் கலாநிதி. விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலக சட்டமூலம் தொடர்பானவிவாதத்தில் கலந்து கொண்டு ☞ 2

## இனி இது .....

புதியதலைவர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாகம் தெரிவு செய்யப்படும். அதன்பின்னர் ஜனவரி 28 கட்சியின் மாநாடும் திருகோணமலையிலேயே இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

கட்சித் தலைமைக்குப் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் கிழக்கிற்குச் சென்று தனக்கு ஆதரவளிக்கக்கேட்டுப் பரப்புரைகளில் ஈடுபட்டிருந்தார். எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே மூன்றாவது வேட்பாளரான சீனித்தம்பி யோகேஸ்வரன் தனது ஆதரவு சிறீதரனுக்குத்தான் என்பதை பட்டிருப்பில் நடந்த கட்சி உறுப்பினர்களுடனான கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார். அவர் தலைமைக்கான தேர்தலில் போட்டியிட்டபோதே கிழக்கில் சுமந்திரனுக்கு ஆதரவாக விழக்கூடிய வாக்குகளைப் பிரிப்பதற்காக, சிறீதரனுக்கு ஆதரவாகவே களமிறக்கப்பட்டார் என்று சொல்லப்பட்டது. யோகேஸ்வரன் தனது ஆதரவைச் சிறீதரனுக்கு வெளிப்படுத்தியிருப்பதன் மூலம் அது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

தனது ஆதரவு சிறீதரனுக்குத்தான் என்று யோகேஸ்வரன் தெரிவித்தாலும் அவர் உத்தியோகபூர்வமாக தலைமைக்கான போட்டியிலிருந்து விலகவில்லை. வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான கால எல்லை எல்லாம் முடிந்துவிட்ட நிலையில் அவரும் ஒரு போட்டியாளராகவே இன்னும் இருக்கின்றார். எனினும் தனக்கு வாக்களிக்கக்கூடியவர்களையும் சிறீதரனுக்கே வாக்களிக்குமாறு அவர் கோருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்படிப் பரபரப்பாக பொதுக்குழுக் கூட்டத்திற்கு அனைவரும் தயாராகிவரும் நிலையில் இன்றைய கூட்டத்திற்குப் பின்னர் என்ன நடக்கும் என்கிற ஆர்வம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதற்கிடையில் திருகோணமலைக் குழுப்பங்கள் தொடர்பாக அந்த மாவட்டக் கிளைத் தலைவர் குகதாசன் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் விளக்கமளித்துள்ளார். அவரது கருத்துப்படி இந்த விடயத்தில் சம்பந்தரின் மகனே இடைநடுவில் நின்று விளையாடுகின்றார் என்றே எண்ணவேண்டியுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சம்பந்தர் பரிந்துரைத்த இரண்டு பேரின் பெயர்களை வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கவில்லை என்பதும் மாற்றுக் கட்சிகளில் அங்கத்துவம் வகித்த ஒருவருக்கு கட்சியில் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது என்பதுமே பிரச்சினைகளாக இப்போது தூக்கிப் பிடிக்கப்படுகின்றன என்று கூறியுள்ள அவர் அதற்கான விளக்கங்களையும் வழங்கியுள்ளார்.

சம்பந்தர் பரிந்துரைத்த இருவரும் கட்சியால் நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் தெரிவுக் குழு முன்பாக நேர்முகத் தேர்வுக்கு வர மறுத்தமையே அவர்கள் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதமைக்குக் காரணம் என்றும் அந்தத் தெரிவுக் குழுவை கட்சியின் தலைவர், செயலாளரே நியமித்தார்கள் என்றும் கூறியுள்ளார். அதேபோன்று கட்சியில் முக்கியத்துவம் வழங்கப்படுகிறார் என்று குற்றச்சாட்டப்படும் மாற்றுக் கட்சிகளில் அங்கம் வகித்தவரான நபர் கட்சியின் நீண்ட கால விசுவாசியின் மகன் என்றும் கட்சியின் தலைவர்கள் பலர் உயிரைக் காத்துக்கொள்ள இந்தியாவில் சென்று பதுங்கியிருந்த சமயத்தில் சாதாரண உறுப்பினரான அவருக்கு அப்படித் தப்பிச் செல்ல வழியிருக்காத காரணத்தால் தனது பாதுகாப்புக்காக மாற்றுக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டார் என்றும் அவர் கட்சிக்குத் திரும்பி வந்தபோது அவருக்குரிய முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும் என்று கட்சியின் மூத்த உறுப்பினர்களால் தனக்கு அறிவுறுத்தப்பட்டது என்றும் விளக்கமளித்துள்ளார். சர்ச்சைக்குரியவராகக் குறிப்பிடப்படும் நபர் கட்சியில் தன்னைவிட அங்கத்துவ நிலையில் மூத்தவராக இருக்கும்போது அவருக்குத் தான் முக்கியத்துவம் வழங்குகின்றார் என்று கூறப்படுவது அபத்தம் என்றும் தெரிவித்துள்ளார்.

சம்பந்தரை நேரடியாகச் சந்திப்பதற்குக் கேட்டால் அவர் மருத்துவமனைக்குச் செல்கிறார், அல்லது வேறு எங்காவது செல்கிறார் என்று கூறி அவரது மகன் தவிர்த்துவிடுவார், அல்லது சம்பந்தர் தொலைபேசியில் பேசுவது மற்றவர்களுக்கு விளங்காத நிலையில் ஒரு மொழிபெயர்ப்பாளர் போன்று அவரது மகனே உரையாடுபவர்களுக்கு இடையில் நின்று கருத்துப் பரிமாறுகின்றார், இதுவே சிக்கல்களை நீடிக்கச் செய்கின்றது என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பின்னணியிலேயே இன்றைய கூட்டம் நடக்கவிருக்கின்றது. எப்படியிருந்தாலும் பொதுக்குழுக்கூட்டத்தை நிறுத்துவது அல்லது ஒத்திவைப்பது நோக்கிய முடிவுகள் இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்றே விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. போட்டியின்றி நிர்வாகத் தெரிவை நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படலாம், அது பற்றி விவாதிக்கப்படலாம் ஆனால் அதுவும்கூடச் சாத்தியமான ஒன்றல்ல என்றே அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு, வடமேல், மற்றும் தென்மாகாணத்தில் புதிய முதலீட்டு வலயத்தை அமைத்தல்

சுமாங்குளம், பரந்தன் இரசாயனக் கம்பனி வளாகம் மற்றும் காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன வளாகத்தில் புதிய முதலீட்டுவலயங்களை அமைத்தல்

இரணவில மற்றும் திருகோணமலைப் பிரதேசங்களில் புதிய முதலீட்டுவலயங்களை அமைத்தல்,

பிங்கிரிய மற்றும் அம்பாந்தோட்டை முதலீட்டு வலயங்களை மேலும் விரிவாக்கம் செய்தல்,

உத்தேசிக்கப்பட்டுள்ள பொருளாதாரவலயங்களை அமைப்பதற்கு தேவையான தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, பொருத்தமான அரச, -தனியார் பங்குடமை மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, குறித்த முதலீட்டுவலயங்களை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.-

## சிறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பால் உற்பத்தியில் நாம் இன்னும் தன்னிறைவு அடையவில்லை. தேசிய தேவையில் 40சதவீதம் மாத்திரமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. எஞ்சிய 60சதவீதம் இறக்குமதிசெய்வதற்கு 34பில்லியன் ரூபாவுக்கு மேல் செலவிட வேண்டியுள்ளது. ஆண்டுக்கு எழுநூற்று ஐம்பது மில்லியன் லீற்றர் பால் தேவைப்பட்டாலும், 350 மில்லியன் லீற்றர் மாத்திரமே உற்பத்தி செய்கிறோம்.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு, பால் உற்பத்திக்கு சிறிய மற்றும் நடுத்தர பண்ணையாளர்களை வலுப்படுத்த விவசாயதிணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பால் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் பிரான்ஸ் நாட்டின் ஆதரவுடன் 06 பால் உற்பத்தி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. வாரியபொல, வென்னப்புவ, அத்தனகல்ல, கொழும்பு மற்றும் பொலன்னறுவை ஆகிய இடங்களில் உற்பத்தி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் நாவலப்பிட்டியில் இவ்வாறான பால் உற்பத்தி நிலையம் ஒன்று திறக்கப்பட்டது. இத்தொழிற்சாலைக்கு தேவையான பால் பதப்படுத்தும் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கும், உள்நாட்டுத் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கும் பிரான்ஸ் அரசாங்கம் 600 இலட்சம் ரூபா உதவி வழங்க இருக்கிறது. இதற்குத் தேவையான கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிர்மாணங்களுக்காக நாவலப்பிட்டி பல்நோக்கு சேவைகள் கூட்டுறவுச் சங்கம் 60மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. இந்த தொழிற்சாலையில் ஒரு நாளைக்கு 5000 லீட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

அத்துடன் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் இவ்வாறான தொழிற்சாலைகளை ஆரம்பிக்க உதவுமாறு பிரான்ஸ் அரசாங்கத்திற்கு எமது அமைச்சு பரிந்துரைத்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 250 மில்லியன் ரூபாவை பால் உற்பத்தி மற்றும் மேம்பாட்டுக்காக ஒதுக்கியுள்ளார். குறிப்பாக ஆடு வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் கால்நடை தீவனத்தை வரிச்சலுகையுடன் பண்ணையாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்க கால்நடை உற்பத்திசுகாதாரதிணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## ரூ. 35 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரவையில் தீர்மானம் எடுத்துள்ளது. அதனையிட்டு நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆனால் சுகாதாரத்துறையின் ஏனைய தரப்பினரை மறந்துள்ளமை தொடர்பில் நாம் கவலையடைகின்றோம். எனவே தான் 35ஆயிரம் ரூபா கொடுப்பனவை நிறைவுகாண் வைத்திய அதிகாரிகளுக்கும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைக்கின்றோம்.

வரலாற்றில் ஒருபோதும் அநீதியான தீர்மானம் அமைச்சரவையில் ஒருதலைப்பட்சமாக எடுக்கப்பட்டதில்லை. எமதுகோரிக்கையானது, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் நாம் மேற்கொள்ளும் போராட்டமல்ல. எனினும், அவர்களுக்கும் பாரிய பொறுப்புள்ளது. ஏனைய சுகாதார தரப்பினருக்காகவும் முன்னிற்க வேண்டிய பொறுப்பு அரச மருத்து அதிகாரிகள் சங்கத்துக்கு உள்ளது

இந்த தொழிற்சங்க நடவடிக்கையினால் நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களை கருத்திற்கொண்டு நீரிழிவு வைத்தியசாலை, புற்றுநோய் வைத்தியசாலை, மகப்பேற்றுவைத்தியசாலை மற்றும் சிறுவர் வைத்தியசாலைகளின் அத்தியாவசிய சேவைகள் வழமைபோன்று முன்னெடுக்கப்படும் என்றார்.

## தொழில்நுட்பப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்ப ரீதியான புத்தாக்கம் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தி போன்ற தீர்மானம் மிக்கதுறைகளில் தலைமைத்துவம் வகிக்கக்கூடிய தொழில் வல்லுநர்களை உருவாக்கும் நோக்கில் ஐக்கிய அமெரிக்காவின் புகழ் வாய்ந்த பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொண்டு விஞ்ஞான தொழிநுட்பவியல் பல்கலைக் கழகமொன்றை நிறுவுவதற்கான தேவை கண்டறிப்பட்டுள்ளது.

அவ்வாறான பல்கலைக் கழகத்தின் மூலம் அதிநவீன முறைகளைப்பயன்படுத்துவதற்கும், உலகளாவிய கற்கைகள் தொடர்புகளை மேம்படுத்துவதற்கும், ஆராய்ச்சிமற்றும் அபிவிருத்திக்கான அடிப்படைச் சூழலை உருவாக்குவதற்கான இயலுமை கிடைக்கும். ருஊ ஙநசமநடநலஇ ருஊ சுஷ்ளநசளனைநஇருஊ ஹுயளனை ருஜஷ்ளநசளவைல ழுக ஆஷ்உஜுபையஜ போன்ற பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட அடையாளங் காணப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களில் ஒரு பங்காண்மைபல்கலைக்கழகத்தைத் தெரிவு செய்து, குறித்த பல்கலைக் கழகத்துடன் ஒத்துழைத்து அரச தனியார் பங்குடமையாக மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விஞ்ஞான தொழிநுட்பவியல் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார்.

## மாகாண நிதிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள கீழ்க்காணும் விதைப்புரைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான மாகாண மூலதனம் மற்றும் மீண்டெழும் தேவைகளை மதிப்பீடு செய்வதற்கான விதைப்புரைகள்

2024ஆம் ஆண்டுக்கான அரச வழங்கல்களை மாகாண சபைகளுக்காக ஒதுக்கி வழங்குவதற்கான விதப்பரைகள்

மாகாண சபைகளுக்கான மிகவும் பயனுள்ள வகையில் வளங்களை ஒதுக்கி வழங்குதல் மற்றும் குறித்த வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்தல் தொடர்பான கொள்கை ரீதியான விதைப்புரைகள்

அத்துடன், 2024ஆம் ஆண்டுக்கான நிதி ஆணைக் குழு சமர்ப்பித்துள்ள குறித்த ஆணைக் குழுவின் விதப்புரைகளுடன் கூடிய அறிக்கையை அரசமைப்பின் உப உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## புலம்பெயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புலம்பெயர் தமிழர்கள் எம்முடன் பேச்சு நடத்துகின்றனர். அண்மையில் புலம்பெயர் தமிழர்களின் அமைப்பொன்று எம்முடனும், தேரர்களுடனும், ஜனாதிபதியுடனும் தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சு நடத்தியது.

அதற்கு ஒரு தரப்பினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகத்தை அமைக்கும்போதும் எதிர்ப்புக்களை வெளியிட்டார்கள். அந்த அலுவலகம் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றி விசாரணைகளை கடந்த வாரமும் நடத்தியது.

காணாமாலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் 14998 முறைப்பாடுகள் எமக்கு கிடைக்கப்பெற்றிருந்தன. இந்த முறைப்பாடுகள் அனைத்தையும் 2025ஆம் ஆண்டுடிசெம்பருக்கும் விசாரணை செய்து நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

## 'இலங்கையர்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க நேற்று நடைபெற்ற சேர்.பொன். அருணாச்சலத்தின் நினைவுதின நூற்றாண்டுநிகழ்விலேயே இதனைத் தெரிவித்தார். நினைவு தின நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக அருணாசலத்தின் சிலை அமைக்கப்பட்டிருக்கும் வளாகத்தில் நடைபெற்றது.

சேர்.பொன். அருணாச்சலத்தின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி, அவரது குடும்பத்தாருடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

சேர்.பொன்.அருணாச்சலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்று அல்லாமல் இலங்கையர் என்ற எண்ணக்கரு தொடர்பில் அதிக நம்பிக்கை கொண்டிருந்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அந்த கொள்கையை பின்பற்றிய டீ.எஸ்.சேனநாயக்க அனைத்து இனத்தவரையும். மதத்தவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தார் என்றும் தெரிவித்தார்.

சரிவடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் பயணத்தை ஆரம்பித்திருக்கும் தேசம் என்ற வகையில், அனைவரும் ஒன்றுபடுவதே சேர்.பொன். அருணாச்சலத்திற்கு வழங்கும் உயரிய கௌரவமாகும் என்றம் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

முன்னாள் அமைச்சர் டீ.எம்.சுவாமிநாதன் மற்றும் பொன்னம்பலம் அருணாசாலத்தின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## அனைத்துப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுக்கான அனைத்து அஸ்வெசும நலன்புரி மேன்முறையீடுகளுக்கும் ஜனவரி 31ஆம் திகதிக்குள் தீர்வு காணவும், பெப்ரவரி முதல் வாரத்திற்குள் இரண்டாவது சுற்றுக்கான புதிய விண்ணப்பங்களைக் கோரவும், ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் அஸ்வெசும நலன்புரி விசேட மேன்முறையீட்டு பிரிவை உருவாக்கி கிராமிய மட்டத்தில் அதற்கான உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்ததாவது:

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தாங்கள் அஸ்வெசும திட்டத்தை இழக்க நேரிடும் என்ற சந்தேகமும் அச்சமும் கொண்டிருந்தனர். பல பிரச்சனைகளுக்கு மத்தியிலும் மாவட்ட செயலாளர்கள் உட்பட அனைவரும் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்தினர். இதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள், கிராம அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் ஆதரவு வழங்கினர். தொழில்நுட்ப குறைபாடுகள் உள்ளன. அவற்றைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்காக பணிப்பாளர்கள் சபை நடவடிக்கை எடுத்தது.

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் எதிர்காலத்தில் பல மேன்முறையீடுகளுக்கு இடம்கிடைக்கும். மேன்முறையீட்டு விசாரணையின் போது ஏற்படும் பிரச்சினைகளை மாவட்ட அரசாங்க அதிபர்களும் பிரதேச செயலாளர்களும் தீர்த்து வைப்பார்கள். தொழில்நுட்ப பிரச்சனை ஆரம்பத்திலிருந்தே வந்தது. கொள்ளளவுபோதுமானதாக இல்லை. இப்போது அஸ்வெசும திட்டத்திற்கு சரியானதொரு திட்டம் உள்ளது. குறிப்பிட்ட கட்டங்கள் உள்ளன.

ஒக்டோபர், நவம்பர் ஆகிய இரு மாதங்களில் அனைத்து வாக்காளர் பதிவேடுகளையும் கிராம உத்தியோகத்தர்கள் தயாரித்து முடித்தனர். அரசியலமைப்புச் சட்டத்தின்படி, அதற்காக அறிவிக்கப்பட வேண்டிய திகதி உள்ளதால், அதற்கேற்ப வாக்காளர் பதிவுப் பணிகள் அனைத்தையும் முடிக்க கிராம உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தனர். அஸ்வெசும திட்டத்திற்கும் அத்தகைய ஆதரவு தேவை. தற்போது அரசின் வறுமை ஒழிப்புத்திட்டம் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# சரக்குக் கப்பல்களைப் பாதுகாக்கவே செங்கடலில் இலங்கை போர்க் கப்பல்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



செங்கடல் ஊடாக இலங்கை வரும் சரக்கு கப்பல்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலானால் கொழும்பு துறைமுகம் உட்பட நாட்டின் அனைத்து துறைமுகங்களின்நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு, இறக்குமதிபொருள்களின்விலை அதிகரித்து விடும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வதேச சரக்கு கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்யவே போர் கப்பலை அனுப்புகின்றோம், மாறாக இரு நாட்டின் போரில் பங்குதாரர்களாக அல்ல எனவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். அமைச்சர்களான மனு நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

இதன் போது மேலும் கூறிய ஜனதிபதி -

செங்கடல் ஊடாக இலங்கை வரும் சரக்குக் கப்பல்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலானால் கொழும்பு துறைமுகம் உட்பட நாட்டின் அனைத்துத் துறைமுகங்களும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும். எனவே பன்னாட்டு சரக்கு கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எனவே தான் இலங்கை கடற் படையின் போர்க் கப்பலை செங்கடலின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அனுப்புவதற்கு ஆலோசனை வழங்கினேன். மஹா பராக்கிரமபாகு மன்னரின் ஆட்சி காலத்திற்குப் பின்னர் சர்வதேச கடலில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை போர்க் கப்பலை அனுப்புவது இதுவே முதல் தடவையாகும்.

செங்கடல் பாதுகாப்புக்கான செலவீனங்களை கருதி நாம் விலகினால் இலங்கைக்கு சர்வதேசக் கப்பல்களின் வருகை குறைந்து நாட்டின் பொருளாதாரத்திற்கு பாரியளவிலான தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே செங்கடலில் சரக்கு கப்பல்களின் போக்குவரத்து சுமுகமாக இடம்பெறுவதை உறுதி செய்வதற்காக போர்க் கப்பலை அனுப்புகின்றோம்.

மாறாக, இருநாடுகளுக்குஇடையிலான போரில் ஒருதரப்புக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் இலங்கை செங்கடலுக்கு கப்பலை அனுப்ப வில்லை. பிராந்தியத்தின் முக்கிய நாடுகள் பலவும் செங்கடல் ஊடான பன்னாட்டு சரக்கு கப்பல்களின் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்வதற்காக தனது போர் கப்பல்களை ஏற்கனவே அனுப்பியுள்ளன. ஹெளத்தி கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகள் காரணமாக பல சர்வதேச சரக்கு கப்பல்கள் செங்கடல் ஊடான போக்குவரத்தைப் பயன்படுத்தாது வேறு கடல் மார்க்கங்களை பயன்படுத்துகின்றன. இதனால் கடல் போக்கு- வரத்து கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

கொழும்பு துறைமுகத்திற்கு செங்கடல் ஊடாக நேரடியாக வர வேண்டிய கப்பல்கள் தென் ஆபிரிக்காவை சுற்றிவரும் போது, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலையும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. எனவே இந்த பிரச்சினையை எளிதானதொரு விடயமாகக் கருத முடியாது.

ஒன்றரை வருடங்களுக்கு முன்பு எரிபொருள் கப்பல் ஒன்று வரும் வரை காத்திருந்த இலங்கை, இன்று சர்வதேச கடல் பாதுகாப்புக்கு கப்பலை அனுப்பும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

எனவே ஹெளத்தி கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக செங்கடலில் இலங்கை கடல் படையின் போர் கப்பலும் சிறப்பு படையினரும் செயல்படுவார்கள் என்று குறிப்பிட்டார். (05)

# திருத்தியமைக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் கொண்டுவரப்பட்டால் ஆதரிக்கமாட்டோம்

## ரிஷாத் பதியுதீன் திட்டவட்டம்



திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், வேறு நாடுகளின் கொந்தராத்துக்களை எமது நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான சட்டமாக இருந்தால் அதனை ஆதரிக்க முடியாது என்று மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் குருநாகல் மாவட்ட மத்திய குழுக் கூட்டம் ரோமன் பரடைஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் -

'எதிர்காலத்தில், நாட்டுக்குத் தேவையான நல்லதொரு தலைமைத்துவத்தையும் சிறந்த ஆட்சி, அதிகாரத்தையும் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, குருநாகல் மாவட்ட கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நாம் கலந்துரையாடி, அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டோம்.

தற்போது நாட்டில் வாழ முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. பொருள்களுடைய விலை கட்டுக்கடங்காமல் அதிகரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மிகவும் பாரதூரமான கஷ்டங்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வற் வரியால் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையைக் கொண்டுசெல்ல முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அரசாங்கம் இந்த விடயத்தில் கவனஞ்செலுத்த வேண்டும். அரிசி, சீனி போன்ற அத்தியாவசிய பொருள்களைக்கூட வாங்க முடியாமல் மக்கள் திண்டாடுகின்றார்கள். எனவே, இவற்றுக்கான நிவாரணத்தை அரசாங்கம் உடனடியாக மக்களுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன், திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் நாடளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டம் சுயநலத்திற்காகவும் தங்களுடைய கட்சி அரசியலை மேற்கொள்வதற்காகவுமே பயன்படுத்தப்பட்டமையை நாம் அறிவோம். எனவே, நாட்டுக்கு நன்மைபயக்கக் கூடியதாக, அரசியல் இலாபத்துக்காக எந்தவொரு இனத்தையும் மதத்தையும் குறிவைக்காமல் செயற்படக்கூடிய ஒரு சட்டமாக அது அமைந்தால் ஆதரவு வழங்குவோம். அவ்வாறின்றி, சுயநலத்திற்காகவோ அல்லது வேறு நாடுகளின் கொந்தராத்துக்களை எமது நாட்டில் நடைமு- றைப்படுத்துவதற்கான திருத்தப்பட்ட சட்டமாக இருந்தால் அதனை ஆதரிக்க முடியாது' என்று தெரிவித்தார்.

முன்னாள் மாகாணசபை உறுப்பினரும் மக்கள் காங்கிரஸின் குருநாகல் மாவட்டத் தலைவருமான எம்.என்.நஸீர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், மாவட்டத்தின் இளைஞர் அமைப்பாளர் அசார்தீன், மத்திய குழு செயலாளர் அன்பாஸ் அமால்தீன் மற்றும் குளியாப்பிட்டிய பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் இர்பான் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களும் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (05)

# 15 வயதுச் சிறுமியின் மீது கூட்டு பாலியல் வல்லுறவு

## காத்தான்குடியில் மூவர் கைது

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசமொன்றில் 15 வயது சிறுமி ஒருவரை அழைத்துச்சென்று கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட 3 பேரை ஞாயிற்றுக்கிமை பொலி- ஸார் கைது செய்துள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசம்ஒன்றில் கடந்த சனிக்கிழமை 6 ஆம் திகதி 15 வயது சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த 26 வய- துடைய இளைஞர் வீடொன்றுக்கு வரவழைத்துள்ளார்.

அங்கு அவரின் நண்பர்கள் இருவர் உட்பட 3 பேர் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட சிறுமி உறவினரிடம் தெரிவித்ததையடுத்து, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து காத்தான்குடி பெரும் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி கஜநாயக்க தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட அந்த பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இருவரும் 32 வயதுடைய ஒருவரும் என 3 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இதில் பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் இந்த சம்பவத்தில் கைதானவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# பருத்தித்துறை பகுதியில் கஞ்சா மீட்கப்பட்டது



521ஆவது படைப்பிரிவு இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து யாழ்ப்பாணம் - பருத்தித்துறை கடற்பகுதிக்கு அண்மையில் உள்ள பகுதியில் திங்கட்கிழமை அதிகாலை 95 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஆலயத் தேர் திருத்தப் பணியில் ஈடுபட்ட இளைஞன் மின்சாரம் தாக்கி உயிரிழப்பு

*மின்சாரம் தாக்கி இளைஞன் பலியான சம்பவம் ஒன்று கிளிநொச்சியில் பதிவாகியுள்ளது.*

*குறித்த சம்பவம் திங்கட்கிழமை கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாத பெருமாள் ஆலய தேர்திருப்பணி வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 29 வயதுடைய ஜெகதீஸ்வரன் பவித்திரன் என்ற வவுனியா பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த இளைஞனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.*

*உயிரிழந்த இளைஞனின் சடலம் கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலை கொண்டு செல்லப்பட்டு, பின்னர் உறவினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.*

*சம்பவம் தொடர்பில் இராமநாதபுரம் பொலிஸார் விசரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)*

# ஓட்டோ கவிழ்ந்து விபத்து சாரதி உட்பட மூவர் காயம்

*மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் ஓட்டோ ஒன்று செங்குத்தாக கவிழ்ந்து இடம்பெற்ற விபத்தில் ஓட்டோச் சாரதி மற்றும் இரு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.*

*இந்த சம்பவம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள் ளது.*

*காயமடைந்தவர் கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளனர். (05)*





## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கண்துடைப்பு நாடகம்

தேசியஒற்றுமைக்கும்நல்லிணக்கத்துக்குமான அலுவலக சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. நேற்றைய2ஆம்மதிப்பீட்டு விவாதத்திற்குப் பின்னர் திருத்தங்களுடன் 41 மேலதிகவாக்குகளால்சட்டம்நிறைவேற்றப்பட்டது. எதிராக 7 வாக்குகள் மட்டுமே வழங்கப்பட்டன.

போர் முடிந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும்இலங்கையில்நல்லிணக்கத்துக்கான அடித்தளம் உறுதியாக இடப்படவில்லை. போர் முடிந்ததற்குப் பின்னர் நல்லிணக்கம் குறித்துத் தொடர்ந்து பேசப்பட்டாலும் இன்னும் அது சாத்தியமானதாக இல்லை. அதற்குக் காரணம் ஆளும் தரப்புக்களால் மேற்கொள்ளப்படும் நல்லிணக்கமுயற்சிகள்அல்லதுமுன்னெடுப்புக்கள் பேச்சளவில் மட்டும் இ-ருப்பதே.

நல்லிணக்கம் ஏற்படுவதற்குப் போரால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு நீதியும் பரிகாரமும் கிடைப்பது அவசியம். அத்தோடு போருக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலமுமே நல்லிணக்கத்தைச் சாத்தியப்படுத்த முடியும். ஆனால் கொ-ழும்பின் ஆளும் தரப்புக்கள் இதனை ஒருபோதும் செய்வதில்லை. நல்லிணக்க ஆணைக்குழுக்கள், நல்லிணக்கச் செயற்றிட்டங்கள் என்று ஒப்புக்குச் சப்பாணியாகச் சில நடவடிக்கைகள், அனைத்துலக சமூகத்தை ஏமாற்றுவதற்காக எடுக்கப்படுகின்றனவே தவிர உண்மையான நல்லிணக்கத்தை நோக்கிய நடவடிக்கைகளாக அவை இருந்ததில்லை.

இப்போது நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தை உருவாக்கச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பதும்கூட பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் முறையான கலந்துரையாடல்களோ அல்லது அவற்றின் ஏற்புடனோ மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இந்த முயற்சியும் வெற்றியளிக்கும் என்று நம்புவதற்கு எந்த முகாந்தரமும் இல்லை.

’’நல்லிணக்கத்திற்கான முயற்சிகள் பாதிக்கப்பட்டவர்களின் வேண்டுகோள்களிற்கு தீர்வை காணவேண்டும். இலங்கையின் வரலாற்றுடன் நேர்மையான நல்லிணக்கத்தை காண்பதற்கான சீர்திருத்தங்களை முன்னெடுக்கவேண்டும்” என மாற்றுக் கொள்கைகளிற்கான நிலையம் வலியுறுத்தியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டமூலம் இந்தக் கரிசனைக்குத் தீர்வு காணத் தவறியுள்ளது என்பதையும் மாற்றுக் கொள்கைகளிற்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.


இலங்கையின் நிரந்தர சமாதானம் மற்றும் உறுதிப்பாட்டுக்கு அடிப்படையான நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் சீர்திருத்தங்களிற்கான வாய்ப்புகளையும் தவறவிட்டுள்ளன என்பதையும் அது இடித்துரைத்துள்ளது.

ஒருங்கிணைந்த தேசிய ஐக்கிய கொள்கையை உருவாக்குவதில் அரசாங்கம் உண்மையான ஆர்வத்தைகொண்டுள்ளதுஎனபாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் சிறிதளவும் நம்பிக்கையில்லை என்பதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதையெல்லாம் பார்க்கும்போது இந்த தேசிய நல்லிணக்க அலுவலகமும் ஒரு கண்துடைப்பு நாடகம்தான் என்பது தெளிவாகின்றது.

# கூட்டணிகளும் அதன் அரசியலும்

**உபுல் யோசப் பெர்னான்டோ**



1990களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்கவுடன் சந்திரிக்கா இணைந்து மக்கள் முன்னணியை உருவாக்கியபோது, பண்டாரநாயக்கா குடும்பத்தின் முடிசூடா இளவரசனான அனுர பண்டாரநாயக்கா சொன்னதைக் கேட்டு முழு நாடும் சிரித்தது.

‘‘எங்கள் சகோதரி சில முச்சக்கரவண்டிக் கட்சிகளுடன் கூட்டணி வைத்துள்ளார். அந்த கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் மூடடை மூடையாகக் கட்டி முச்சக்கர வண்டியில் அனுப்பலாம்...” என்றார் அனுர.

அவர் இவ்வாறு கூறும்போது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஆளும் தரப்பினர் குதித்து கைதட்டினர். மக்கள் முன்னணி என்ற இந்தக் கூட்டணியை உருவாக்கி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்கொள்கைகளுக்குதனதுதாயும்சகோதரியும் துரோகம் இழைத்துவிட்டார்கள் என்று கூறி அனுர ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார்.

‘‘சந்திரிகா சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை காட்டிக்கொடுத்தார்...” என்பதுதான் அனுரவின் குற்றச்சாட்டு. அநுரவுடன், ஜனதாச நியதபால, திலக் கருணாரத்ன மற்றும் பிரதீப் ஹபாங்கம போன்ற கட்சியில் பலம்மிக்கவர்களும் ஐ.தே.கவில் இணைந்து கொண்டனர். ஐ.தே.க. ஜனாதிபதி விஜேதுங்கவை பலப்படுத்தும் வகையில் அவர்கள் கட்சி மாறினர்.

“தேச விடுதலை கட்சியைச் சேர்ந்தவர்களான கே.பி.சில்வா, பெர்னாட் சொய்சா, நிஹால் பெரேரா ஆகியோருக்கு எத்தனை வாக்குகள் கிடைக்கும்? கட்சியின் உயிர் நாடியையே அழித்துவிட்டார்கள். சந்திரிக்காவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது...” என்று, அந்தக் காலத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு நெருக்கமாக இருந்த கட்சியின் முக்கியஸ்தர்கள் கூறினார்கள்.

ஆனால், நாடாளுமன்ற சபாநாயகராக இருந்தவரான சிங்கள சினிமாவின் சூப்பர் ஹீரோ



காமினி பொன்சேகாவையே தனது மடியில் சந்திரிகா வீழ்த்தியபோது ஐக்கிய தேசியக் கட்சியினரே கூடத் திகைத்தனர். இதனால் சந்திரிக்காவிற்கு நெருக்கமானவரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் காமினி வந்ததை விரும்பாதவருமான பிரபல பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் சந்திரிக்காவைத் தொடர்ந்து தாக்கினார்.

சந்திரிக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் மண்ணைத் தன் இரண்டு கைகளாலும் அள்ளித் தின்றுவிட்டார் என்று கடுமையாகச் சாடினார் விக்டர் ஐவன். ஆனால் சந்திரிக்கா அவற்றையெல்லாம் பொருட்படுத்தவில்லை. தான் செல்லும் ஒவ்வொரு பரப்புரை மேடைக்கும் காமினியையும் அழைத்துச் சென்று மக்கள் வாக்குகளை ஈர்த்தார்.

ஒரு காலத்தில் லலித், பிரேமச்சந்திரா ஆகியோருடன் சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரேமதாசவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மா னம் கொண்டு வந்தவரான காமினி தமது கட்சியின் பரப்புரை மேடைகளில் தோன்றியபோது, அதனைப் பொறுக்க முடியாத சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், ஐ,தே.க. திருடன் என்று வைதார்கள். லலித் கப்பல்களை மூழ்கடித்தார், காமினி மகாவலியைத் தின்றார், காமினிக்கு ஆஸ்திரேலியாவில் ஆப்பிள் தோட்டங்கள் இருக்கின்றன என்று கூறி சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் தாக்கினர். ஆனால் சிறீமாவோவும் சந்திரிகாவும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து வரும் வாக்குகள் தமக்குத் தேவை என நம்பினர். அவர்களின் முடிவு சரியானது. இறுதியாக சந்திரிகா தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி 17 வருடங்களின் பின்னர் முச்சக்கரவண்டியுடன் இணைந்து ஆட்சி அமைத்தது. ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது.

சந்திரிகாவின் இந்த உத்தியை இன்று சஜித்தும் ஐக்கிய மக்கள் சக்தியும் பின்பற்றுகின்றன. ஈன் விஜயலால் 1978இல் அரசியலில் நுழைந்தார். சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் அரசியல் கற்றுத் தேர்ந்த வல்லுநர். தென்னிலங்கையில் கொடிகட்டிப் பறந்தவர். 2004 தென் மாகாண சபைத் தேர்தல், 2009 தென் மாகாண சபைத் தேர்தல் மற்றும் 2014 தென் மாகாண சபைத் தேர்தல்களில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட்டு அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர். சந்திரிக்கா முதலில் அவரை முதலமைச்சராக்கினார். அதன் பின்னர் மஹிந்தவும் அவரை முதலமைச்சராக்கினார். அதற்குக் காரணம் அவருடைய புகழ். அவர் மீது எந்த ஊழல் குற்றச்சாட்டும் இல்லை. அவர்கள் கிராமத்து அரசியல்வாதிகள்.

ரணில் தலைவர் ஆன பிறகு ஐ.தே.கவிற்கு என்ன நடந்தது? மேற்கத்திய உடை அணிந்த அரசியல்வாதி கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்குள் அரசியல் பேசத் தொடங்குகிறார். தேர்தல் காலத்தில்தான் அவர் கிராமத்துக்குச் சென்றனர். ஆனால் சுதந்திரக் கட்சி மற்றும் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அப்படியல்ல. அவர்கள் கிராமத்தில் தங்கினர். பிரேமதாச மற்றும் ஜே.ஆர். காலத்தில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களும் கிராமத்திலேயே இருந்தனர். இதன் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் கிராமங்களைக் கைப்பற்ற முடியவில்லை. ஆனால் ரணில் தலைவரான பின்னர் சுதந்திரக் கட்சி கிராமங்களைத் தொட்டது. இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொழும்பில் உள்ள சொகுசு விடுதிகளில் ஆங்கிலத்தில் அரசியல் பேசி பழக்கமில்லை. கிராமத்து இறுதி ஊர்வலத்திலோ, திருமணத்திலோதான் அவர்கள் அரசியல் பேசுகிறார்கள். ஈன் விஜயலால் அப்படிப்பட்ட ஒரு கிராமம் மற்றும் மாகாண தலைவர். மக்கள் நேசிக்கும் தலைவர்.

சந்திரிகாவின் 1994 வெற்றிக்குப் பின்னால் திலான் பெரேரா அவருக்கு ஒரு பெரிய பின்புலமாக இருந்தார். இவரது தந்தை பதுளையில் உள்ள இடதுசாரி குடும்பப் பரம்பரையைச் சேர்ந்தவர். அனுர பண்டாரநாயக்க ஜே.ஆர். ஜெவர்த்தனவுடன் இணைந்து, விஜயகுமாரணதுங்க - சந்திரிகா உள்ளிட்ட இடதுசாரிகளை அழிக்க முயன்றபோது திலான் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறி மக்கள் கட்சியில் இணைந்தார். பின்னர் சந்திரிகா சிறீ-லங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுப்பெடுத்தபோது கட்சிக்குத் திரும்பினார். சந்திரிக்காவின் பெற்றிக்குப் பெரும் பக்கபலமாக இருந்தார்.

சந்திரிகா அலையை ஏற்படுத்திய சிலரில் திலானும் ஒருவர். 17 வருடங்கள் எதிர்க்கட்சியாக இருந்த சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தது அப்படித்தான். டிலான்கள் வெற்றிக்காக வேலை செய்கிறார்கள்; தோல்விக்காகவல்ல. அவர் நல்ல பேச்சாளர். சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இனவாதிகளை நிராகரித்து இன ஒற்றுமைக்காக வாதிட்டார். அவர் ரோயல் கல்லூரி மாணவர். சுதந்திரக் கட்சியில் ரோயலிஸ்ட்டுகளுக்கு நிறையவே பஞ்சம் இருக்கின்றது. ஆனால், டிலானோ டை கோட் அணிந்து கிராமத்தில் இறங்கக்கூடிய தலைவர். அரச கிரீடம் அணிந்திருந்தாலும் ஊர் அரசியல் செய்தவர். ஊழல் குற்றச்சாட்டில் சிக்காதவர்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில்

(5ஆம் பக்கம் பார்க்க...)

# கூட்டணிகளும் அதன் அரசியலும்............

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ரணிலுடன் இணையுமாறு சந்திரிக்கா அவருக்கு ஆலோசனை வழங்கினார், ஆனால் அவருக்கு ரணிலைப் பிடிக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் வகுப்புவாதக் கொள்கையும், சஜித்தின் நடுத்தரப் பொருளாதாரக் கொள்கையும் அவருக்குப் பிடித்திருக்கலாம். அதனால் அந்தக் கட்சியில் இணைந்துள்ளார்.

2015இல் தோற்கடிக்கப்பட்ட ராஜபக்ச கூட்டணியின் வெற்றிக்காக மார்க்கெட்டிங் கேம் ஆடிய படித்தவர் நாலக கொடஹேவா. கோட்டா வெற்றி பெற வேண்டிய கடைசிநேர இளைஞர் வாக்குகளைப் பெறுவதற்கான பரப்புரையை உருவாக்கியவர். அவர் தனியாக 325,479 இலட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளார், இது பிரசன்ன ரணதுங்கலவின் வாக்குகளைவிட அதிகமாகும். 2020 பொதுத் தேர்தலில் கொடி ஏந்தியவர். 1994ஆம் ஆண்டு சந்திரிகாவும் 2010ஆம் ஆண்டு ராஜபக்சவும் பெற்ற விருப்பு வாக்குகளுக்கு அடுத்த நிலையில் உள்ளவை.

'அரகலய' நேரத்தில் கோத்தா அவரை அமைச்சராக நியமித்தபோதும் அமைச்சர் பதவியை மறுத்து அரகலயத்திற்கு பணிந்தார். அவரது இந்த நடத்தை ராஜபக்ச குடும்பத்தின் சேறு தன் கைகளில் இல்லை என்பதைக் காட்டுகிறது.

''அதற்காக நாலக கொடஹேவா மீது குற்றச்சாட்டுகள் இல்லையா..?"

எஸ்.பி.திஸநாயக்க ஹகுரன்கெத்தவில் அரண்மனைகளை உருவாக்கினார் என்று ஐ.தே.க. குற்றஞ்சாட்டியது. இதே எஸ்.பி.திஸநாயக்கவை ஐ.தே.க. தன்னுடன் சேர்த்துக் கொண்டபோது ஜே.வி.பியும் சுதந்திரக் கட்சியும் 'மிஸ்டர் கிளீன்' ரணில் விக்கிரமசிங்க திருடர்களுடன் தூங்கிக் கொண்டிருக்கிறார் என்று குற்றஞ்சாட்டின. அதேபோன்று மங்கள சமரவீர செய்தார் எனக்கூறப்படும் கடனட்டை மோசடி தொடர்பாக அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் நோக்கில் அவரின் பின்னால் சிஐடியை அனுப்பியது ஐ.தே.க. அதே கட்சி பின்னர் மங்களவைத் தனது தோள்களில் சுமந்து திரிந்தது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால, விவசாய அமைச்சராக இருந்து தனது தம்பிக்காக அரிசி மாஃபியாவை உருவாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதேபோன்று 2015இல் துமிந்த, ராஜித, ராஜித போன்றவர்கள் மைத்திரியுடன் சேர்ந்து ஐ.தே.க. பக்கம் வந்தபோது அவர்கள் மீதும் அந்தக் கட்சி குற்றச்சாட்டுக்களை அடுக்கியது. ஆனால் அவர்கள் அனைவரும் ஐ.தே.கவுடன் சேர்ந்த பின்னர் அவர்கள் ஐ.தே.கவுக்கு ஹீரோக்களாக மாறினர். கூட்டணிகள் உருவாகும்போது அதைப் பார்த்து அச்சப்படும் எதிரிகள் அந்தக் கூட்டணிக்குள் அந்த ஊழல்வாதியையும், இந்த ஊழல்வாதியையும் எடுத்தார்கள் என்று அழுவது இயல்புதான்.

அதேநேரம் கொடஹேவாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் இருந்து நீதிமன்றம் அவரை முழுமையாக விடுவித்தது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவையெல்லாமே அரசியலுக்காகத்தான். 1994இல் இருந்து அவர்கள் தோற்காமல் வெற்றி பெறுவதற்காக மட்டுமே அரசியல் செய்தார்கள்.

"பேராசிரியர் சன்ன ஜெயசுமணவை சிறுபான்மையினர் விரும்புவதில்லை..."

இது ராஜபக்சக்கள் மற்றும் ஐ.தே.க. பரப்பிய கதை.

அப்படியென்றால், "தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதிராக பரப்புரை செய்த, சந்திரிக்காவையே இனவாதி என்று திட்டிய, ஹலால் உணவுகளுக்கு எதிராக நின்ற, ஹெல உறுமயவைத் தொடங்கிய சம்பிக்க ரணவக்க எப்படி 2015இல் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட முடிந்தது?"

அப்போது, ஹக்கீம், ரிசாத் மற்றும் சுமந்திரன் எவரும் சம்பிக்கவின் பிரசன்னம் குறித்து கேள்வி எழுப்பவில்லை. காரணம், அப்போது மைத்திரிபாலவுக்கு வெற்றிபெற ஹெல உறுமயவின் வாக்குகள் தேவைப்பட்டன.

ரணில் அநுராதபுர மாவட்டத்தை சிறீ லங்கா சுதந்திரக் கட்சி அல்லது பெரமுனவுக்கு விட்டுக்கொடுத்திருந்தார். 2020 பொதுத் தேர்தலில் அனுராதபுரத்தில் இருந்து சன்ன ஜயசுமண 133,780 வாக்குகளைப் பெற்றார். அநுராதபுரம் போன்ற மாவட்டங்களை வெல்வதற்கு அந்த மாகாணங்களில் சன்ன ஜயசுமண போன்ற பிரபல பாத்திரங்கள் தேவை.

2001இல் எஸ்.பி. திஸநாயக்க ஐ.தே.கவுக்கு வந்தபோது அவருடன் வேறு சில அரசியல் தலைவர்கள் ஐ.தே.க.வுக்கு வந்தனர். நவீன் திஸாநாயக்க ரணிலிடம் சென்று அது தொடர்பான தனது அதிருப்தியைத் தெரிவித்தார். இவர்கள் வருகையால் நுவரெலியாவில் தான் தோற்கக்கூடும் என்கிற அச்சமே அதற்குக் காரணம். அதுபோலவே மகிந்த விஜேசேகர ஐதேகவுக்குள் வந்தபோது லக்ஷ்மன் யாப்பா பயந்து போய் ரணிலிடம் யாப்பாவை வைத்துக்கொண்டு மாத்தறையை வெல்ல முடியாது என்று கூறினார். கிரியெல்ல வந்தபோது கெஹலிய ரம்புக்வெல்ல (அப்போது ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்) இதே பிரச்சினையைக் கூறினார்.

"ஆட்சி அமைக்க மாவட்டத்தில் ஆசனங்களை அதிகரிக்க கடுமையாக உழைக்கிறீர்களா? அல்லது நிதானமாகச் சென்று எதிர்க்கட்சி ஆசனத்தை மட்டும் கொண்டு வந்து மீண்டும் எதிர்க்கட்சியில் அமரப் போகிறீர்களா...?" என்று ரணில் அவர்களிடம் கேட்டார்.

2001 ஐதேக வெற்றி பெற்றது. அழுதுகொண்டிருந்தவர்கள் எல்லாம் நாடாளுமன்றம் வந்து அமைச்சர்களானார்கள்.

ஆளும் தரப்பிலிருந்து எதிர்க்கட்சிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருவதால் புதிய ஆளும் தரப்புகள் உருவாகின்றன; வாக்குகள் பெறப்படுவதால் மட்டுமல்ல. ஐக்கிய மக்கள் சக்தியின் பந்துலால் பண்டாரிகொடல போன்ற மெளன மாவீரர்கள் இல்லாமல் கூட்டணிகள் அமைக்க முடியாது. ஆளும் தரப்புகளை அமைக்க முடியாது. தமக்கு முன் கட்சி பற்றி சிந்திப்பவர்களை கட்சி பார்த்துக்கொள்ளவேண்டும்.

1994 ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் 2024 ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் ஒரு ஒற்றுமை உள்ளது. 17 வருடங்களின் பின்னர் சுதந்திரக் கட்சிக்கு ஆட்சியமைப்பதற்காக பொது முன்னணி உருவாக்கப்பட்டது. 2024 ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி மக்கள் வாக்கு மூலம் 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஜனாதிபதிப் பதவியைப் பெற முயற்சிக்கிறது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றை நாடிய தென்னாபிரிக்காவுக்கு இலங்கையர் பலர் ஆதரவு








இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருக்கும் தென்னாபிரிக்காவுக்கு ஆதரவையும், நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில் கொழும்பிலுள்ள தென்னாபிரிக்க உயர் ஸ்தானிகரகம் முன்பாக நடைபெற்ற உடன்நிற்பு போராட்டத்தில் பலர் கலந்துகொண்டதுடன், அவர்கள் இலங்கையில் இடம்பெற்ற மீறல்களால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு தென்னாபிரிக்கா ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என வலியுறுத்தினர்.

காஸாவில் பதிவாகியிருக்கும் உயிரிழப்புக்களும், சேதங்களும், மனிதாபிமான நெருக்கடியும் 1948 ஆம் ஆண்டு இனப்படுகொலை தொடர்பான பிரகடனத்தின் அளவீடுகளை எட்டியிருப்பதாகக் குறிப்பிட்டு தென்னாபிரிக்கா கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

இந்நிலையில் காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு எதிராக தென்னாபிரிக்க அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைக்கு தமது உடன்நிற்பையும், நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கையில் இயங்கிவரும் பலஸ்தீன விடுதலை இயக்கம் திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் கொழும்பு, ரோஸ்மீன்ட் இடத்திலுள்ள தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகரகம் முன்பாக ஒருமைப்பாட்டு போராட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இதில் இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் சுஹைர் ஹம்தல்லா செயிட், அருட்தந்தை லயனல், சிவில் சமூக செயற்பாட்டாளர்களான ஷ்ரீன் ஸரூர், ரஸியா, ரூகி பெர்னாண்டோ, ஹனா இப்ரஹீம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பைஸர் முஸ்தபா உள்ளடங்கலாகப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் 'அநீதி இடம்பெறும் அனைத்து இடங்களிலும் நீதி சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றது', 'இஸ்ரேலுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்துள்ள தென்னாபிரிக்காவை ஆதரிக்கின்றோம்', 'உடனடி போர்நிறுத்தம் அவசியம்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், 'பலஸ்தீனத்தை விடுவியுங்கள்', 'இனியும் ஆக்கிரமிப்பு வேண்டாம்', 'பலஸ்தீனம் விடுதலை பெறும்', 'சிறுவர்களைக் கொல்லவேண்டாம்' போன்ற கோங்களையும் எழுப்பினர்.

இதனிடையே தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகரக அதிகாரிகள் நுழைவாயிலுக்கு வெளியே வந்து ஒருமைப்பாட்டை வெளிப்படுத்திய ஆதரவாளர்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர். பதிலுக்கு தமது நன்றியையும், உடன்நிற்பையும் வெளிப்படுத்திய ஆதரவாளர்கள், இந்நடவடிக்கையின் மூலம் தென்னாபிரிக்க அரசாங்கம் ஒட்டுமொத்த உலகுக்கும் அரசியல் நேர்மை குறித்த தெளிவான செய்தியை எடுத்துரைத்திருப்பதாகச் சுட்டிக்காட்டினர்.

அதேவேளை இதுபற்றிக் கருத்து வெளியிட்ட அருட்தந்தை லயனல், இஸ்ரேல் -பலஸ்தீன மோதல் விவகாரத்தில் உலகின் வேறுஎந்தவொரு நாடும் செய்ய முன்வராததை தென்னாபிரிக்கா செய்திருப்பதாகவும், அதனைத் தாம் நன்றியுடன் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

'நாம் தென்னாபிரிக்காவிடமிருந்து பல பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். தற்போதைய சூழ்நிலையில் இலங்கை அரசாங்கம் செயற்படும் விதம் குறித்து மிகவும் வெட்கமடைகின்றேன். இஸ்ரேலுக்குப் பணியாளர்களை அனுப்புவதற்கும், செங்கடலுக்குப் பாதுகாப்புப்படையை அனுப்புவதற்கும் இலங்கை நடவடிக்கை எடுத்திருக்கின்றது. இது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல. அதேபோன்று கடந்த காலங்களில் எமது நாட்டின் தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ சிறுபான்மையினத்தவருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துநோக்குமிடத்து, எமது நாடும் சர்வதேச நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்படவேண்டும்' என அவர் வலியுறுத்தினார்.

அவரைத்தொடர்ந்து கருத்துரைத்த சிவில் சமூக செயற்பாட்டாளரான ஷ்ரீன் ஸரூர், காஸாவில் நிகழ்த்தப்படும் இனப்படுகொலைக்கு எதிராக ஹேக்கை (நெதர்லாந்தின் ஹேக் நகரிலேயே சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ளது) நாடியதன் மூலம் மிகவும் வலுவான முதலாவது எதிர்ப்பைத் தென்னாபிரிக்கா வெளிப்படுத்தியிருப்பதாகவும், இது மிகத்துணிச்சலான நடவடிக்கை எனவும் சுட்டிக்காட்டினார். அதேபோன்று அண்மையில் இலங்கை அரசாங்கத்தால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கும் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தில் 'மன்னிப்பு' என்ற விடயம் உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்ட ஷ்ரீன் ஸரூர், இலங்கையில் இடம்பெற்ற அநீதிகளால் பாதிக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு தென்னாபிரிக்கா ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

## அரச ஊழியர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியர்களினதும்பல்கலைக்கழக விரிவுரையாளர்களினதும் கொடுப்பனவுகளைஅதிகரிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

35,000 ரூபாவாக இருந்த வைத்திய அதிகாரிகளின் வருகை மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு 70,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான கல்விக் கொடுப்பனவு 25 வீதத்தால் அதிகரிக்கப் பட்டுள்ளது.

அந்த கொடுப்பனவுகளை, ஜனவரி மாத சம்பளத்துடன் வழங்குவதற்குஜனாதிபதிசமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## போராளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)







இதன்போது, பண்டிதரின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தலில் பண்டிதரின் குடும்பத்தினர், யாழ். மாநகர முன்னாள் முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன், யாழ் மாநகர சபை முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் உள்ளிட்ட சிலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

1985ஆம்ஆண்டுஜனவரிமாதம் 9 ஆம் திகதி அச்சுவேலியில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாமை படையினர் முற்றுகையிட்டதால் ஏற்பட்ட சமரில் கப்டன் பண்டிதர் உட்பட பல போராளிகள் வீரச் சாவடைந்தார்.

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, சட்ட மூலத்தின் இரண்டாம் மதிப்பீடு 41 மேலதிக வாக்குகளால் நிறை வேற்றப்பட்டது. சட்டமூலத்தின் குழுநிலை விவாதத்தின்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டனு, அந்தத் திருத்தங்களுடன் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், நேற்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தேசிய நீரளவை சட்டமூலமும் திருத் தங்களுடன் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.




காலைக்கதிர் Kalaikkathir

# புதையல் கண்டறியும் ஸ்கேனர் இயந்திரத்துடன் மூவர் கைது

## வைத்தியர் உள்ளடக்கம் ; இரு வாகனங்கள் பறிமுதல்



வவுனியாவில் திங்கட்கிழமை காலை பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரிடம், அவர்கள் பொலிஸார் என்று அடையாளம் காணாமல் புதையல் தொடர்பான ஸ்கேனர் இயந்திரம் ஒன்றை 15 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற மூவரை பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினர் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட ஸ்கேனர் இயந்திரம் மற்றும் அதற்காகப் பயன்படுத்தப்பட்ட 2 சொகுசு வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

34 வயதுடைய மதவாச்சியை சேர்ந்த வைத்தியர், 38 வயதுடைய வவுனியா மணிபுரம் பகுதியைச்சேர்ந்த ஒருவர், 31வயதுடைய வவுனியா கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிவான் நீதிமன்றில் சந்தேக நபர்களை முன்னிலைப்படுத்தவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# பொலிஸ் நிலையத்திற்குள் கஞ்சாப் போதைப்பொருள் பாவித்த பொலிஸ் உத்தியோகத்தர் பணி இடைநீக்கம்

பொலிஸ் நிலையத்திற்குள் கஞ்சா போதைப்பொருள் பயன்படுத்தினார் எனக் கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கராப்பிட்டி வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் இவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனத் தெரியவந்துள்ளது. இதனையடுத்து சந்தேக நபர் காலி பொலிஸ் அத்தியட்சகரான சனத் அமரசிங்கவால் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். (05)

# சமூகத்தைச் சீரழிக்கத் தூண்டும் நபர்களின் மதநம்பிக்கையை ஆராய அமைச்சரவை குழு

சமூகத்தை சீரழிக்கத் தூண்டும் நபர்களின் மதநம்பிக்கைகள் குறித்து ஆராய அமைச்சரவை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

மத போதனைகளைத் திரிபுபடுத்தும் மற்றும் சமூகத்தில் பதற்றத்தை உருவாக்கும் செயல்களைத் தடுக்கவும் அகற்றவும் அரசாங்கம் புதிய சட்டங்களை இயற்றும் என்றும் அமைச்சர் கூறினார். நாட்டின் சட்ட கட்டமைப்புக்குள் அனைவரும் அவரவர் மதத்தைக் கடைப்பிடிக்கும் சூழலை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (05)

# சங்குவேலியில் ஞாயிறன்று வீட்டினுள் நுழைந்து தாக்கு

## இளைஞன் அதிரடியாகக் கைது

யாழ்,சங்குவேலி பகுதியில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவதினமான ஞயிற்றுக்கிழமை, குறித்த வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த வன்முறைக் கும்பலொன்று வீட்டின் கதவு, ஜன்னல், கண்ணாடிகள் ஆகியவற்றை அடித்து நொறுகியுள்ளதுடன், அங்குள்ள பெறுமதியான பொருள்கள் பலவற்றையும் சேதப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 08 லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார்சைக்கிள் ஒன்றையும் தீயிட்டுக் கொளுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவரைக் கைது செய்த பொலிஸார், தாக்குதல் மேற்கொண்ட ஏனையவர்களையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர். (05)

# ‘கமாண்டர்ஸ் கோல்ஃப் கிண்ணம் – 2024’ 11ஆவது அத்தியாயம் விரைவில் ஆரம்பம்!



நடப்பு ஆண்டுக்கான கமாண்டர்ஸ் கோல்ஃப் கிண்ண போட்டித் தொடர், பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆரம்பமாகவுள்ளது.

முதன்மையான நிகழ்வான கமாண்டர்ஸ் கோல்ஃப் கிண்ண போட்டித்தொடர், திருகோணமலை சீனக்குடாவில் உள்ள கண்கவர் ஈகிள்ஸ் கோல்ஃப் லிங்க்ஸில், எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கைவிமானப்படையால் நடத்தப்படும் கமாண்டர்ஸ் கோல்ஃப் கிண்ண போட்டித் தொடருக்கு பிரதான பிரத்தியேக அனுசரணையாளராக டயலொக் எண்டர்பிரைசஸ் உதவியளிக்கின்றது.

2013 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட இப்போட்டித்தொடரின், 11ஆவது அத்தியாயம் இதுவாகும். மேலும் இந்த நிகழ்வு இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ல் உதேனி ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின் கீழ் நடைபெறுகிறது.

இதில் நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள 100 இற்கும் மேற்பட்ட ஆண் மற்றும் பெண் கோல்ப் வீரர்கள் பதிவு செய்துள்ளனர்.

இதுதவிர, ஈகிள்ஸ் சேலஞ்ச் டிராபி, ஆயுதப் படைகளில் பணியாற்றும் உறுப்பினர்களில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு வழங்கப்படும் மகத்தான விருதாகும். இது முப்படை கோல்ப் வீரர்களுக்கு (ஆண் மற்றும் பெண் இருபாலாருக்கும்) வழங்கப்படும் முக்கிய கிண்ணமாகும்.

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறும் விருது விழாவின் போது இந்த சிறப்புமிக்க கிண்ணகள், மற்ற பட்டங்கள் மற்றும் பாராட்டுகள் அவர்களுக்கு வழங்கப்படும்.

உள்ளூர் மற்றும் சர்வதேச ஆண் மற்றும் பெண் கோல்ஃப் ஆர்வலர்கள், இலங்கை சுற்றுலாத்துறையின் குறிப்பிடத்தக்க அம்சமான கமாண்டர்ஸ் கோல்ஃப் கிண்ண போட்டித் தொடரில் பங்கேற்கவுள்ளனர்.


விளையாட்டுசுற்றுலாவை மேம்படுத்துவதற்கான மூலோபாய முன்முயற்சியின் ஒரு பகுதியாக, அனுராதபுரம், கொக்கலா மற்றும் சீனக்குடா உள்ளிட்ட முக்கிய இடங்களில் கோல்ஃப் மைதானங்களை விமானப் படை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பௌத்த மதத்தை அவமதித்த ‘விஸ்வ புத்தா’விற்குப் பிணை

பௌத்த மதத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரத்தினபுரியின் விஸ்வ புத்தா என்பவரை பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்று(செவ்வாய்க்கிழமை) உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபருக்கு எதிராக சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சாசனத்தின் கீழ் குற்றச்சாட்டை சுமத்த முடியாது என நீதிவான் தீர்ப்பளித்தார். இதன்படி தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க உத்தரவிட்ட நீதிவான், முறைப்பாட்டை மார்ச் 27 ஆம் திகதி மீண்டும் அழைக்கு மாறும் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (05)

# இலங்கைக்கு வருகிறார் ஜப்பான் நிதி அமைச்சர்



இரண்டு நாள்கள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு ஜப்பானின் நிதி அமைச்சர் ஷுனிச்சி சுசுகி இலங்கை வரவுள்ளார்.

11 ஆம் திகதி இலங்கை வரும் ஜப்பானின் நிதி அமைச்சர் 12 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்து இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோருடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை நடத்த உள்ளார்.

மேலும் ஜப்பானிய நிதியமைச்சர் சுசுகி மற்றும் அவரது தூதுக்குழு நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை உள்ளிட்ட இடங்களை பார்வையிடவுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (05)

# ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் பூசகர் கைது

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில், ஹொரண பகுதியைச் சேர்ந்த பூசகர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பூசகர் சுனாமிவத்த பிரதேசத்திலுள்ள ஆலயமொன்றில் பணியாற்றி வந்த நிலையிலேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் பொதிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகச் சட்டமூலம் கொண்டு வரப்படுகின்றது. இந்தச் சட்டமூலத்தைக்கொண்டுவருவதால் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்பது மந்திரத்தினால் மாங்காய் பிடுங்குவதற்குச் சமமானதாகும்.

அடுத்து ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அதற்காகவே தற்போது இவ்விதமான நிகழ்வுகள் எல்லாம் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே, இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். பொறுப்புக்கூறல்கள் செய்யப்பட வேண்டும்.

அதற்காக இந்திய இலங்கை ஒப்பந்தம் முதலில் அமுலாக்கப்பட வேண்டும். அதனடிப்படையில் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். அந்தத் தேர்தலை தனியாக நடத்தவதற்கு செலவீனங்கள் அதிகமாக இருக்கின்றது என்றால் ஜனாதிபதி தேர்தலுடன் இணைத்து முன்னெடுக்கலாம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. சமிந்த விஜேசிறி இராஜினாமா

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்யத் தீர்மானித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்த அவர், தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகுவதற்கான கடிதத்தைக் கையளித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர் Kalaikkathir


# கொழும்பு இளைஞர் பௌத்த சங்க 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் ஜனாதிபதி ரணில்











அனைத்து குடிமக்களையும் உள்ளடக்கி சமூக, கலாசார, சமய மற்றும் கல்வி ரீதியாக நாட்டில் வலுவான அடித்தளத்தை உருவாக்கமுன்னோடியாகப்பணியாற்றியவர் மறைந்த டி.பி. ஜயதிலக்க முன்னெடுத்தது போன்ற வேலைத்திட்டமொன்று நாட்டுக்கு அவசியம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

நிகழ்காலத்தை விட எதிர்காலத்தில் கவனம் செலுத்தி ஒரே இலங்கையர்களாக அனைவரும் ஒன்றிணைந்து முன்னேற வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு இளைஞர் பௌத்த சங்கத்தின் 125 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

கொழும்பு இளைஞர் பௌத்த சங்கம் 1898 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அனகாரிக தர்மபாலவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்பகாலத் தலைவராக டி.பி. ஜயதிலக தெரிவு செய்யப்பட்டதோடு நாட்டின் மிகப் பழைமையான மற்றும் மிகப் பெரிய பௌத்த அமைப்பாக கொழும்பு இளைஞர் பௌத்த சங்கம் நாட்டிற்கான பரந்த நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றது.'ஒரே இலங்கைக்கான கருத்தாடல்'என்ற தொனிப்பொருளில் இவ்வருட ஆண்டு நிறைவு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட நினைவு மலர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதுடன், பத்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் புலமைப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து சங்கத்தின் பிரதானிகள் , ஆட்சிக்குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்களுடன் புகைப்படம் எடுக்கும் நிகழ்விலும் ஜனாதிபதி இணைந்து கொண்டார்.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கூறியவை வருமாறு -

கொழும்பு இளைஞர் பௌத்த சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு 125 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இந்த சங்கம் இலங்கையின் வரலாற்றை உருவாக்கிய சங்கம் என்றே கூற வேண்டும். அந்தக் காலகட்டத்தில் மேற்கத்திய நாடுகளில் கிறிஸ்தவ இளைஞர் சங்கங்கள் நிறுவப்பட்டன. அப்போது நாங்கள் பௌத்த மறுமலர்ச்சியுடன் இருந்தோம். ஹிக்கடுவை ஸ்ரீசுமங்கல தேரர், ஒல்கட் போன்றவர்கள் எமது நாட்டில் பௌத்த மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கு தலைமை தாங்கினார்கள். இவ்வாறானதொரு பின்னணியில் உலகின் முதலாவது இளம் பௌத்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த சங்கத்தின் நோக்கு மேற்கத்திய நாடுகளின் நோக்கை விட வேறுபட்டது. பௌத்த கல்வியில் நாட்டை முன்னேற்றுவதற்கு இச்சங்கம் பெரும் உதவியாக இருந்தது. டி.பி. ஜயதிலக இதற்கு தலைமை வழங்கினார். அவரின் பாரியார் களனி ரஜமஹா விகாரைக்கும் பெரும் சேவை செய்தார்.

இளைஞர் பௌத்த சங்கத்தை எமது சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெரும் சக்தியாக நாங்கள் கருதுகிறோம். 125 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இந்த சங்கத்தை கௌரவிக்க விரும்புகிறேன். கொழும்பு கோட்டையில் உள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான காணி இன்னும் 99 வருடங்களுக்கு இச்சங்கத்திற்கு வழங்கப்படுகின்றது. மேலும், அந்த இடத்தைச் சுற்றிலும் சுற்றுலா பகுதியாக மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

கொழும்பு இளைஞர் பௌத்த சங்கத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் தொனிப்பொருள் 'ஒரே இலங்கைக்கான கருத்தாடல்' என்பதாகும். இதுவே இன்றைய நாட்டுக்குத் தேவை. இன்று அனைவரும் எமக்கு ஓர் இலங்கை தேவை என்று கூறுகிறார்கள்.

யுத்தத்துடன் தொடர்புடைய அனைத்து பிரச்சினைகளுக்கும் 2025ஆம் ஆண்டாகும் போது தீர்வு வழங்க எதிர்பார்க்கிறோம். இடம்பெயர்ந்தோர் மற்றும் காணாமல் போனவர்களின் பிரச்சினைகள் தொடர்பான அரசியல் தீர்வுகள் வழங்கப்படும். அத்துடன், நாகதீப விகாரையை மையமாகக் கொண்ட சமய நிலையத்தை மேலும் விரிவுபடுத்தவும், யாழ்ப்பாணத்தில் தனித்துவமான இந்து ஆலயத்தை நிறுவவும் எதிர்பார்க்கிறோம். நாம் ஒன்றுபட்டு முன்னேறுவோம். இது குறித்து இளைஞர்களுடன் கலந்துரையாட வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்ப அவர்களின் ஆலோசனைகள், திட்டங்கள் தேவை.

நாம் நிகழ்காலத்தையன்றி எதிர்காலத்தை பற்றி நோக்க வேண்டும். டி.பி. ஜயதிலக்க உருவாக்கியது போன்ற திட்டம் மீண்டும் அவசியம். மேலும், அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நாடாக முன்னேறக்கூடிய ஒரு திட்டம் தேவை.

இலங்கை ஆரம்பகாலம் முதலே விவசாயத்தை மையமாகக்கொண்ட நாடாகும். பாதுகாப்பான விவசாயத்தின் மூலம் நமது உணவுப் பயிர்களை ஏற்றுமதி செய்யலாம். இது போன்ற பாரிய செயற்திட்டங்கள் எம் முன்னால் அதிகம் இருக்கிறது.

மேலும், ஊழல்தடுப்பு ஆணைக்குழு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதற்கான குழு அரசமைப்பு சபையால் நியமிக்கப்பட்டுள்ளது.

மேலும், நமது நிதி விதிமுறைகளுக்குப் பதிலாக, சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின்படி நிதிக் கட்டுப்பாடு குறித்த அறிக்கையை அளித்துள்ளோம்.

எவ்வாறு விலைமனு கோருவது, நிதியை எவ்வாறு செலவு செய்வது உள்ளிட்ட அனைத்தும் அதில் இடம் பெற்றுள்ளன. அதனை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்தில் தனி ஆணைக்குழுவை நியமிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. அரச நிதி அதிகாரிகளும் தங்கள் பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும். மேலும் இந்த நாட்டில் அரசியல் கட்சிகளை நிர்வகிக்கும் சட்ட விதிகள் தேவை. உலகின் பிற நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் அரசியல் செயல்முறைகளை ஆய்வு செய்ய ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பாரிய விடயம்.

நாம் உலகளாவிய ரீதியில் செயற்படுவதாக இருந்தால், நாம் ஏனைய நாடுகளுடன் இணைய வேண்டும். அதற்கு நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் தேவை. சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஏற்கனவே கையெழுத்தாகியுள்ளது. அதற்காக இந்தியாவுடனான பேச்சு நிறைவடைந்து வருகிறது. சீனாவுடன் பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் தாய்லாந்துடன் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். குறிப்பாக தாய்லாந்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் ஒரு நாடாக எமக்கு மிகவும் முக்கியமானது.

மியான்மாருடனும் பேச்சுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. மியான்மாரில் பிரச்சினைகள் இருந்தாலும் அதில் நாம் ஈடுபட வேண்டியதில்லை. லாவோஸ் மற்றும் வியட்நாமுடன் நமது உறவுகளைப் பேண வேண்டும். அவர்களின் பொருளாதாரம் உலகிற்கு திறந்து விடப்பட்டது போல் நமது பொருளாதாரத்தையும் உலகிற்கு திறந்து விட முடியும். அவர்கள் வெற்றி பெறும் போது, நாம் எப்படி தோல்வியடைவோம்? கம்போடியாவைக் கருத்தில் கொண்டால், அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் பெரும் பொருளாதார முன்னேற்றம் அடைந் துள்ளனர். சில கட்சிகள் வழமையான விதத் தில் சிந்தித்தாலும், அனைவரும் ஒன்றிணைந்து ஒரே பொருளாதாரத் திட் டத்துடன் முன்னோக்கிச்செல்ல வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். - என்றார். (05)

# பாடசாலை மாணவர்களுக்கு வழங்கிய இ.போ.சவின் பருவச் சீட்டுகள் இரத்து

## மாணவர்கள் அசௌகரியம் எனத் தெரிவிப்பு

ஜனவரி மாதத்துக்காக பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை போக்குவரத்து சபையால் வழங்கப்படும் பருவச் சீட்டுகளை இரத்துச் செய்யுமாறு அதன் பொது முகாமையாளர் டிப்போ முகாமையாளர்களுக்கு ஜனவரி 3 ஆம் திகதி அறிவித்துள்ளமையால் பருவச் சீட்டுகளைப் பயன்படுத்தும் ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர் என பாடசாலை பாதுகாப்பு இயக்கத்தின் செயலாளர் நாகஸ்தன்னே அருண தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப்போக்குவரத்துச்சபை தனது 66 ஆவது ஆண்டு நிறைவை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடும் நிலையில் பருவச் சீட்டுகளைப் பயன்படுத்த முடியாமல் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்; எனவும் அவர் குறிப்பிட்டுள்ளனர். இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களில் ஏறிய பாடசாலை மாணவர்கள் ஜனவரி மாதத்துக்கான பயணச்சீட்டை நடத்துநரிடம் காண்பிக்கும் போது இதை இரத்துசெய்யுங்கள், பணத்தை எடுங்கள் என்று கூறுவதாகவும் அவர் கூறியுள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# மீனவர்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியிடம் மனு கையளிக்க முடியாத நிலை

## என்.எம்.ஆலம் வேதனை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான விஜயத்தின் போது மன்னார் மாவட்ட மீனவர்கள் உள்ளடங்கலாக மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து மகஜர் ஒன்றைக் கையளிக்க முயற்சித்த போதும் மகஜர் கையளிக்க முடியாத நிலை ஏற்பட்டதாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்கிற்கான விஜயத்தின் போது மன்னார் மாவட்ட மீனவர்கள்எதிர்நோக்கும்பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாட எங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் கலந்து கொண்டிருந்தோம். கடல் தொழில் சார்பாக கலந்துரையாட நீண்ட நேரம் ஒதுக்கி தரப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் கலந்துரையாடல் தொடர்பான நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்டிருந்தது.

இதனால் எமது கோரிக்கைகளை முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஜனாதிபதியிடம் முன்வைக்க முனைந்த கோரிக்கைகளை ஊடகங்கள் ஊடாக வெளிக்கொண்டு வருகிறோம்.

1. இந்திய இழுவைப் படகுகள் தொடர்பாக

ஆயிரக் கணக்கான இந்திய இழுவைப்படகுகள் எமது வாழ்வாதாரம் அடியோடு அற்றுப் போகும் படியாக எமது கரைக்கு மிக அருகில் (சுமார் 500 மீற்றர் தொலைவில்) வந்து மீன்பிடி நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றன.

இதனால் எமது தொழில் வெகுவாகப் பாதிக்கப்படுவதோடு கடல் வளம் அறவே அற்றுப் போய் விடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே 2016 ஆம் ஆண்டு டில்லியில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு மட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானத்தை செயல்படுத்துவதே இதற்கு தீர்வாக அமையும்.

2.இல்மனைட் மண் அகழ்வு

மன்னார் தீவில் இல்மனைட் மண் அகழ்வானது மக்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தெரியாமல் இடம்பெறுவது பாரதூரமான தொன்றாகும். குறித்த அத்திட்டம் முன்னெடுக்கப்படுமாயின் மன்னார் தீவில் வாழுகின்றமீனவர்கள்தங்கள்வாழிடங்களை இழந்து இப்பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றும் என்பது உறுதியாகும்.

3.சட்டவிரோத மீன்பிடி முறைகளை முற்றாக நிறுத்துவதற்கு அதிகாரிகளைப் பணித்தல்

மாவட்டத்தில் இச்சட்டவிரோத மீன்பிடியானது இந்திய மீனவர்களின் வருகையை காரணம் காட்டி எமது மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே அதனை முற்றாக நிறுத்துவதற்கு அதிகாரிகளுக்கு பணிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

4.காற்றாலை மின் உற்பத்தித் திட்டம்

காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்திற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்லர். இருப்பினும் மீன்பிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிற கடற்கரைப் பகுதிகளுக்கு மிக அண்மையில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை கோபுரங்களால் மீன்பிடி வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது.

காற்றாடியானது மீன்பரம்பல் மீது ஏற்படுத்தும்தாக்கம்தொடர்பாகஎவ்விதமான விஞ்ஞான ஆதாரங்களும் இதுவரையில் வெளியிடப்படவில்லையாயினும் காற்றாலைகள் அமைக்கப்பட்டதன் பின்னர் மீன்பிடி வெகுவாக நலிவடைந்துள்ளதாக மீனவர்கள் தங்கள் அனுபவரீதியில் கூறி நிற்கின்றனர்.

இதுதொடர்பாகவிரிவுரையாளர்கள் குழாமொன்று மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டு, கடல் நீர் ஓடைகள் (கண்டல் தாவரங்கள்) சிதைக்கப்பட்டதும் கடற்கரையோரமாக பாதை அமைக்கப்பட்டதும் மீன்களின் பெருக்கத்தினை பாதித்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தது.

அத்துடன் அதைவிட புதிய 100 காற்றாலை கோபுரங்கள் அமைக்கப்படுவதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் வாழ்விடங்களும் சிதைக்கப்படும் அவல நிலை தோன்றியுள்ளது.எனவே தீவுப் பகுதியை தவிர்த்து இத்திட்டத்தை செயல்படுத்துமாறு மீனவ சமூகம் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

5.இழந்த மீன்பிடி உபகரணங்களுக்கான நஷ்டஈடு எமது மாவட்டத்தில் மீனவர்கள் இயற்கை சீற்றங்களால், இந்திய இழுவைப் படகுகளாலும்தமது மீன்பிடி உபகரணங்களை இழந்துவிடுகின்றபலசந்தர்ப்பங்கள்தொடர்ந்து ஏற்படுவது வாடிக்கையானதொன்றாகும்.

இருப்பினும் மேற்படி பாதிப்புக்குள்ளாகும் ஏழை மீனவர்களுக்கு எவ்வித நஷ்டஈடுகள் வழங்கப்படுவதில்லை என்பது மிகுந்த வருத்தத்திற்குரியது. எனவே இம் மீனவர்களின் வாழ்வாதாரம் முடங்கிப்போய் விடாது அவர்களுக்கு இழப்பீடானது உரிய காலத்தில் வழங்கப்படுதல் நன்மை பயக்கும்.

6. இறால், மற்றும் அட்டைப் பண்ணைகளால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் தீங்கு

எமது மாவட்டம்தோறும் ஆங்காங்கே பரவலாக அட்டைப் பண்ணைகளும் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருதல் தற்போது வெகுவாக அதிகரித்துள்ளது.

அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயனக் கழிவு நீரால் சுற்றுச் சூழல் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. அந்நீரை அருந்துகின்ற கால்நடைகளும் இறந்து வருகின்றன. மேலும் அந் நீர் கலக்கின்ற இடங்களில் மீன்கள் தொகையாக செத்து மடிவது கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது.

எனவேதற்போதுஎமதுமாவட்டமீனவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளை தங்கள் மேலான சமூகத்திற்குத் தெரிவித்து நிற்க்கின்றோம். தாங்கள் அது விடயங்களைக் கண்ணுற்று எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான உரிய தீர்வுகளை பெற்றுத்தர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (05)

# சு.கவுக்கு இடையூறு விளைவிக்கும் தயாசிறிக்கு நீதிமன்று தடை விதிப்பு


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள்செயலாளர்நாயகம்தயாசிறி ஜயசேகரவுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துஷ்மந்த மித்ரபாலவின் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுவதையும் இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குத் தவறான பரிந்துரைகளை வழங்குவதையும் தடுக்கும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு எதிர்வரும் 21ஆம் திகதி வரை அமுலிலிருக்கும் என கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதானகே உத்தரவிட்டுள்ளார்.(05)

# 'புஞ்சா'வும் அவரது சகாவும் போதைப்பொருளுடன் கைது

## ஹிக்கடுவையில் சம்பவம்



ஹிக்கடுவை பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டிருந்த 'புஞ்சா' மற்றும் அவரது சகா ஒருவர் ஹிக்கடுவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஹிக்கடுவை பிரதேசத்தை சேர்ந்த பிரதீப் என்ற புஞ்சா மற்றும் அவரது சகா சுதீஷ் ஆவர்.

யுக்திய நடவடிக்கையின் போது மேற் கொள்ளப்பட்ட விசேட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் ஈஸி காஷ் மூலம் பணத்தை வைப்பு செய்து ஐஸ் போதைப்பொருள்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர் எனப் பொலிஸார் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 5 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் பலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர்எனக்ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்தனர். (05)

# புதுக்குடியிருப்பு, உடையார்க்கட்டு வீட்டுக் கிணற்றில் மண்எண்ணெய்







முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட உடையார்க்கட்டு, குரவில் கிராமத்திலுள்ள வீடொன்றின் கிணற்றுக்குள் கிணற்று நீருடன் மண்ணெண்ணெயும் வெளியேறுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த நாள்களில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் குரவில் கிராமத்தில் உள்ள இவ்வீட்டின் கிணற்றில் வெள்ள நீர் நிரம்பிய நிலையில், கிணற்றைச் சுத்தம் செய்வதற்காக கிணற்று நீரை நீர் இறைக்கும் இயந்திரம் கொண்டு இறைத்துள்ளார்கள். அப்போதே கிணற்று நீருடன் மண்ணெண்ணெய் கலந்திருந்தமை கண்டறியப்பட்டு, அந்த கிராமத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் காணி உரிமையாளர் கூறுகையில் -

2012ஆம் ஆண்டு மீள்குடியேறிய பின்னர், 23 அடி ஆழம் கொண்ட கிணறு தோண்டப்பட்டு கட்டப்பட்டுள்ளது.

தற்போது கிணற்றைச் சுத்தம் செய்யும்போது கிணற்று நீர் முதலில் கருநிறத்தில் காணப்பட்டுள்ளது. பின்னர், மண்ணெண்ணெய் மணம் வீசத் தொடங்கியுள்ளது.

கிணற்று நீரின் மேற்படலத்தில் மண்ணெண்ணெய் தொடர்ச்சியாக காணப்படுகிறது.

இந்நிலையில், வாளியால் தண்ணீரை அள்ளி, அதில் ஓர் இலையை நனைத்து, அதனை பற்றவைத்தபோது அந்த இலை எரிந்துள்ளது. அந்த திரவத்தில் மண்ணெண்ணெய் மணம் வீசியது.

வீட்டின் உரிமையாளர்கள் கிராம சேவையாளருக்கு தொடர்பை ஏற்படுத்தி விடயம் குறித்து தெரியப்படுத்த, கிராம சேவையாளர் ஊடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் கிணற்றைப் பார்வையிட்டுள்ளனர்.

அவர்கள் கிணற்றில் எண்ணெய் கலந்த நீரின் மாதிரியை எடுத்துச் சென்றதுடன், இது தொடர்பில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டு மேற்கொண்டு சட்ட நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் அயலவர்களை விசாரித்தபோது, காணிக்கு அருகில் விடுதலைப் புலிகள் காலத்தில் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்று காணப்பட்டுள்ளதாகவும் அந்த காலத்தில் நிலத்தில் புதைக்கப்பட்ட மண்ணெண்ணெய் லீக்காகி தற்போது நிலத்தடி நீரில் கசிந்துள்ளதோ என்ற சந்தேகிக்க இடமுள்ளது என்று தெரிவித்துள்ளார்கள்.

தற்போது நிலத்தடி நீர்மட்டம் உயரமாகக் காணப்படுவதால் தொடர்ச்சியாக இறைத்து நீர்வரத்துப் பகுதியினை கண்டறிய முடியாத நிலை காணப்படுவதாக மேலும் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை, குடிநீர் மற்றும் வீட்டுத் தேவைக்காக பயன்படுத்தி வந்த கிணற்றில் மண்ணெண்ணெய் கலந்திருப்பதால் குடிநீரினை பெற்றுக்கொள்வதற்கும் குடித்தல், நீராடுதல் போன்ற தேவைகளுக்காக நீரை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும், வீதிக்கு சென்று பொதுக்கிணற்றில் இருந்தே குடிநீரினை தாங்கள் பெற்றுக்கொள்வதாகவும் கிணறு அமைந்துள்ள வீட்டில் வசிப்பவர்கள் தெரிவித்துள்ளனர். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர்
Kalaikkathir

# ஊடகவியலாளர் லசந்தவின் நினைவுதினமும் கவனவீர்ப்பு போராட்டமும் மட்டக்களப்பில்







படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் லசந்த விக்ரம துங்கவின் 15 ஆவது ஆண்டு நினைவுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மட்டக்களப்பில் உள்ள ஊடகவியலாளர்களின் நினைவுத்தூபியில் அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்கு இலங்கை செய்தியாளர் சங்கம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு ஊடக அமையம் என்பன இணைந்து இந்த நிகழ்வை நடத்தியிருந்தது. மட்டக்களப்பு நகரில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபியில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, அதனைத் தொடர்ந்து கடத்தப்பட்ட, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரிய கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், மதத்தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (05)

# விடுதலை புலிகள் காலத்தில் அடக்குமுறைகள் இல்லை

## து.ரவிகரன் சுட்டிக்காட்டு

விடுதலைப் புலிகளின் காலத்தில் அடக்குமுறைகள் இருக்கவில்லை என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மீதான பொலிஸாரின் அடாவடித்தனத்தை கண்டித்தும் வவுனியா மாவட்ட தலைவி விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கோரியும் முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகளால் ஆர்ப்பாட்ட பேரணிஒன்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்டு வரும்போது வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் வவுனியாவில் இடம்பெற்றிருந்தது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கங்கள் இணைந்து அந்தந்த மாவட்டங்களில் நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு போராட்டம் நடத்தன. இதன்போதே இரு பெண்களை கைது செய்யப்பட்டனர்.

ஜனாதிபதி தேர்தல் நடவடிக்கைக்காக வருவதென்றால் தேர்தல் நடவடிக்கைக்காக வந்து பிரசாரத்தை செய்தால் அது வேறு, ஆனால் நீதியை நிலைநாட்டாமல் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் விடயத்தில் மட்டுமல்ல நில அபகரிப்பு, கடலில் மீன்பிடித்தல், சகல தீர்வுத் திட்ட விடயங்களிலும் அவர்களுக்கான தீர்வை வழங்காமல் ஜனாதிபதி என்ற பேரில் இங்கு வந்து சிரித்துக் கொண்டு புகைப்படம் எடுப்பதற்காகவே யாழ்ப்பாணம், வன்னிக்கு வருகிறீர்கள் என்றால்



நாட்டை எவ்வாறு நடத்துகிறீர்கள் என்பதனை யோசித்துப் பாருங்கள்.

பொருளாதாரப் பிரச்சினையால் மக்கள் பட்டினி கிடக்கிறார்கள் நாடு சின்னாபின்னமாகி உள்ளது. யுத்தம் மௌனித்து 16 ஆண்டுகள் கடந்தும் மக்களுக்கான தீர்வுகள் இதுவரை வழங்கப்படவில்லை. தீர்வுகளை வழங்கி விட்டு இங்கு வந்து போட்டோக்கு போஸ் கொடுங்கள்.

ஜெனிற்றாவுக்கு விடுதலை வேண்டும் பொலிஸாரின் அராஜகம் என இவர்கள் சொன்னது உண்மை, பொலிஸார் மேலிடத்து உத்தரவால் அடக்கு முறையாக செயற்படுகிறார்கள்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வாறு அடக்குமுறைகள் இல்லை. எங்களுடைய நிலங்கள், மதங்கள், கடல்கள் காப்பாற்றப்பட்டன. தீர்வுத் திட்டங்கள் என்று கூறி ஏற்றுக் கொண்டதே தவிர இன்று அரசாங்கம் நடந்து கொண்டிருப்பதை உலக நாடுகள் கண்காணித்து எங்களுக்கான தீர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தீர்வை முன்வைக்க வேண்டும் எனக் கேட்டு கொள்கின்றேன் என மேலும் தெரிவித்தார். (05)

# அரகலய போராட்டம் தொடர்பாக தந்தை பெருமிதமடைந்திருப்பார்

## லசந்தவின் பிள்ளைகள் கூறுகின்றனர்

எங்கள் தந்தை அரகலய போராட்டம் குறித்து பெருமிதம் அடைந்திருப்பார் என படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் லசந்த விக்கிரமதுங்கவின் பிள்ளைகள் தெரிவித்துள்ளனர்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 15 வருடங்கள் ஆகின்ற நிலையில் அவரது நினைவேந்தல் நிகழ்வில் வாசிக்கப்பட்ட செய்தியில் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் உணர்வுகளை உலுக்கிய சமாதானம் மற்றும் ஜனநாயகத்தை நேசிப்பவர்களின் இதயங்களை நொருக்கிய தீர்க்ககரமான இழப்பின் போது 15 வருடங்களிற்கு முன்னர் எங்கள் தந்தை லசந்த விக்கிரமதுங்க ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டார்.



எங்கள் தந்தை அமைதியை சமாதானத்தை ஏற்படுத்துபவர் மாற்றத்திற்கான வீரமிக்க போராளி.

இன்று அவரின் பெயர் மனித உரிமைகள் பத்திரிகை சுதந்திரம் சமூகநீதி மற்றும் மற்றும் சமத்துவத்திற்கான போராட்டத்துடன் அடையாளம் காணப்படும் பெயராக மாறியுள்ளது.

எங்களைப்பொறுத்தவரை நாங்கள் அவரை அன்புள்ள அர்ப்பணிப்புமிக்க தந்தையாக மாத்திரம் அறிந்துள்ளோம், எங்கள் குடும்பத்திற்காக தன்னை அர்ப்பணித்த எங்களின் ஆதரவு அமைப்பு ஏனையவர்களிற்காக உயிர் வாழ்ந்தவர்.



எங்கள் குடும்பம் ஒன்றாக கூடும் ஒவ்வொரு தருணத்திலும் நாங்கள் அவருக்காக துயருகின்றோம், எங்கள் மேசையில் ஒரு காலியான ஆசனம் எப்போதும் காணப்படுகின்றது.

அவரின் மறைவிற்கு பின்னர் இலங்கை எதிர்கொண்ட இருள்மயமான ஒவ்வொரு காலகட்டத்திலும் நாங்கள் அவரின் இழப்பை உணர்ந்துள்ளோம்.

எங்கள் தந்தை அரகலய குறித்தும் அவரது செய்தியின் அடிப்படையில் உணர்வுகளின் அடிப்படையில் செயற்பட்டவர்கள் குறித்தும் தங்கள் உயிர்களிற்கான ஆபத்தை பொருட்படுத்தாமல் கொடுங்கோன்மையை எதிர்த்தவர்கள் குறித்தும் பெருமிதம் அடைந்திருப்பார்.

எங்கள் தந்தையைத் தொடர்ந்தும் நேசிப்பவர்களிற்கும் நீதிக்கான எங்கள் போராட்டத்திற்கு ஆதரவளித்தவர்களிற்கும் நாங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எங்கள் தந்தை இன்று இல்லாதபோதிலும் எங்கள் துயரத்தையும் எங்கள் சீற்றத்தையும் அர்த்தபூர்வமான செயற்பாடாக மாற்றி இன்னமும் பூர்த்தி நிறைவேற்றப்படாமலிருக்கின்ற அவரின் நோக்கங்களை நிறைவுசெய்வோம்.

எங்கள் தந்தையை கௌரவிப்போம் எங்கள் தாய்நாட்டில் வெளிப்படைதன்மை, பக்கச்சார்பின்மை, சகிப்புதன்மை, சுதந்திரம் ஆகியவை குறித்த அவரது நோக்கத்தை நிறைவேற்றுவோம். (05)

# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ள ஓட்டோ மரத்தில் சிக்கிய நிலையில் சாரதி சடலமாக மீட்பு





கிராந்துருகோட்டை பிரதேசத்தில் பயணித்த ஓட்டோ ஒன்று வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டதில் ஓட்டோ சாரதி மரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கிராந்துருகோட்டை பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையாவார். தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக உள்ஹிட்டிய நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

குறித்த ஓட்டோ ஞாயிற்றுக்கிழமை இரவு உல்ஹிட்டிய ஓயாவின் பாலத்தில் பயணித்துள்ளது.

இந்நிலையில் பாலத்தில் பயணித்த ஓட்டோ சாரதியுடன் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டுள்ளது.

இதனையடுத்து சாரதி பாலத்தில் இருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மரத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராந்துருகோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நிறைவுகாண் மருத்துவ ஊழியர் வேலை நிறுத்தப் போராட்டத்தில்

நிறைவுகாண் மருத்துவ ஊழியர்கள் செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் அரச வைத்தியசாலைகளில் தொழிற்சங்க வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என நிறைவுகாண் மருத்துவ ஊழியர்களின் கூட்டு ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

35 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அதிகரிப்பு உள்ளிட்ட சில கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். வைத்தியர்களுக்கான கொடுப்பனவை இரட்டிப்பாக்க ஜனாதிபதியால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதன்படி குறித்த கொடுப்பனவானது 35,000 ரூபாவிலிருந்து 70,000 ரூபாவாக உயர்த்த அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.01.2024இல் வெளியிடப்பெற்றது.